**அகலவத்த பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அகலவத்த பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,318,864 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | பெறுவனவு பொழிப்பின் பிரகாரம் ஆண்டின் வைப்புப் பெறுவனவு ரூபா 2,176,996 ஆக இருந்த போதிலும் ரூபா 2,106,024 ஆக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | இனங்காணப்படாமல் ரூபா 21,076,302 தொகையொன்று மோட்டார் வானமும் வண்டியும் கணக்கிலும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் பதிவழிக்கப்பட்டிருந்தது. | இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். | மீதியை உறுதிப்படுத்துவதற்கு தகவல்கள் காணப்படவில்லை. |
| (iv) | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட | சரியாக கணக்கீடு செய்யப்பட | நாட்குறிப்பு பதிவு மூலம் சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்குரிய 02 டெக்ரர் மற்றும் ஸ்கிப் லோடர் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | செய்யப்படும். |
| (v) | ரூபா 1,916,000 தொகையான இயந்திர உகரணங்கள் ரூபா 19,160,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு பதிவு மூலம் சரியாக கணக்கீடு செய்யப்படும். |
| (vi) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 05 காணிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாதுள்ள 02 காணிகள் என்பவற்றை மதிப்பீடுசெய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மதிப்பீடுசெய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது காணிகள் மதிப்பீடுசெய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | ரூபா 347,000 கிரயமான டெக்ரர், மோட்டார் வானமும் வண்டியும் மற்றும் இயந்திர உகரணங்கள் என்ற இரண்டு கணக்கிலும் பதியப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு பதிவு மூலம் சரி செய்யப்படும். |
| (ஆ) | இணங்காமைகள்<br>----------------------------- | | |
| | 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டிற்குமிடையே ரூபா 5,538,022 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடு கண்றியப்பட்டடு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு பதிவு மூலம் சரி செய்யப்படும். |
| (இ) | தொங்கல் கணக்குகள்<br>---------------------------------------- | | |
| | ரூபா 159,479 தொகையான தொங்கல் கணக்கு மீதியை இனங்கண்டு தேவையான சீராக்கங்களைச் செய்து சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடு கண்றியப்பட்டடு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ரூபா 159,479 தொகையான தொங்கல் கணக்கு மீதியில் ரூபா 112,304 தொகை இனங்காணப்பட்டிருந்ததுடன் அது நாட்குறிப்பு பதிவு மூலம் சரியாக கணக்கீடு செய்யப்படும். |
| (ஈ) | எழுத்து மூல சான்றுகள் இன்மை<br>---------------------------------------------------- | | |
| | பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் விரிவான பட்டோலை இல்லாமையினால் ரூபா 33,132,518 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏதிர்காலத்தில் உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படும். |

(உ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கித்துள்கொட நாஹேன கந்த வீதிக்கு கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 56,347 தொகையான மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 56,347 தொகையான நிறுத்திவைத்தலை உள்ளூராட்சி அமைச்சிலிருந்து பெற்று செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 56,347 தொகையான நிறுத்திவைத்தல் பணம் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கோரப்பட்டுள்ளது. |
| (ii) | 2013 முதல் 2016 வரையான காலத்திற்குரிய ரூபா 881,491 தொயையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய வேலைக் கடன்கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற வேலைக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ள அசைவுறாத ஆதனங்களின் ஆதன வரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல | - | 04 சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். | நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 2017 திசெம்பர் 08 ஆந் திகதிய 2049 ஆம் இலக்க வர்த்தமானி | 22,100 | 14 அறிவித்தல் பதாதைகளில் இருந்து அறவிட வேண்டிய கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பணம் செலுத்தாத அறிவித்தல் பதாதைகள் அகற்றப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,635,243 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,343,281 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,232,085 | 4,050,186 | 3,012,862 | 1,037,324 | 2,638,297 | 4,426,003 | 3,507,871 | 918,132 |
| (ii) | வாடகை | 8,647,000 | 3,763,782 | 3,326,869 | 436,912 | 8,440,000 | 3,509,818 | 3,397,206 | 112,612 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 352,500 | 313,300 | 313,300 | - | 285,000 | 299,425 | 299,425 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,549,000 | 17,751,005 | 11,331,388 | 14,719,617 | 10,327,000 | 19,695,021 | 9,275,404 | 10,419,617 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 840,797 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 405,993 தொகை அதாவது 48 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 1,009,253 ஆக இருந்ததுடன் இந்த மீதியில் 2019 மே 31 ஆந் திகதி வரையில் ரூபா 836,898 தொகை அதாவது 83 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு திட்டமொன்று பின்பற்றப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வரி மீதியில் 01-03 வருடம் வரையான நிலுவை ரூபா 557,140 தொகை, 03-05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 136,183 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 151,081 ஆக இருந்தன. | நீண்ட காலமாகக் காணப்படுகின்ற நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு திட்டமொன்று பின்பற்றப்பட்டுள்ளது. |

#### (ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,719,617 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,000,000 ஆக இருந்தன. | வருமானம் அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடுவதற்காக பட்டோலை தயாரித்து கையளிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **உப விதிகள்**<br>பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் 05 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | இதுவரை விதிக்கப்பட்டுள்ள உப விதிகள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் வாகன சேர்விஸ நிலையங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் மற்றும் கொங்கிரீட் புளக் கல் செயற்திட்டத்திற்காக உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பின்னகொட, நாவிட்டிகல வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கொங்கிரீட் தடிப்பம் குறைவடைந்தமை தொடர்பாக நட்டத்தை சரியாக மதிப்பீடு செய்யாமல் நிறுத்தி வைத்தல் பணத்தில் ரூபா 42,660 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் உரிய நியமத்தில் மேற்கொள்ளப்படாமையினால் வீதியின் இருப்பு தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்பட்டது. | நட்டத்தை மதிப்பீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் இரண்டாம் நிலையிலும் ஆரம்ப நிலையிலும் வெற்றிடங்கள் 01 வீதம் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆட்சேர்ப்பக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படடுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 25 வாகனங்களை செயற்படுத்துவதற்காக சபையில் 09 சாரதிகளும் 03 இயந்திர செயற்கடுத்துனர்களும் மாத்திரம் இருந்தனர். | வெற்றிடங்களுக்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 05 சாரதி பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்புக்களை செய்வதற்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உள்ளான 07 வீதிகளை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உள்ளான வீதிகள் திருத்தியமைக்கப் பட வேண்டும். | இந்த வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்துதுடன் அது கிடைத்ததன் பின்னர் சரிசெய்யப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாதுள்ள அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.1.1(உ), 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.1.1(ஈ) மற்றும் (எ) என்பன சரிசெய்யப்பட்டிருக்வில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தகவல்கள் உறுதிப்படுத்த முடியாதிருந்தமையால் சரிசெய்ய முடியாதிருந்தது. |